සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020

தரம் : 10

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்** - ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - II நேரம்:2 மணித்தியாலம்

**கவனிக்கவும் :-**

முதலாம் வினாவுக்கும் பகுதி - I ல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி - II ல் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பின்வரும் நிகழ்வினை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க கொவிட் - 19 தொற்று நோய் நிலமை காரணமாக நாட்டினுள் ஏற்பட்டுள்ள சாதக நிலமையொன்றாக புதிய முயற்சியாளர்கள் சிறிய உற்பத்தியாளர்களது உருவாக்கத்தைக் குறிப்பிட முடியும்.. உள்நாட்டு ஆடை உற்பத்தி தொடர்பில் தொழிற் பயிற்சி அதிகார சபையில் முறையாகப் பயிற்சி பெற்ற சாகிரா தனது சகோதரியுடன் இணைந்து சாகி நவீன ஆடையகம் எனும் பெயரில் தேசிய ஆடைகளை உற்பத்தி செய்யம் வணிகமொன்றை 2020.06.01 இல் ஆரம்பித்தார். தலா ரூபா 25 000 பெறுமதியான இரு ஆடைதைக்கும் இயந்திரங்களையும், தனது சேமிப்புக்கணக்கலிருந்து எடுத்த ரூபா 200 000 பணத்தையும் இவ்வணிகத்தில் அவர் முதலீடு செய்தார்.

| | | |
|---|---|---|
| 20.20.06.01 இல் உபகரணங்கள் கொள்வனவு | ரூபா | 80 000 |
| 2020.06.02 இல் 12% வருடாந்த வட்டியில் பெற்ற வங்கிக்கடன் | ரூபா | 700 000 |
| 2020.06.03 இல் இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு வைப்பிலிட்ட தொகை | ரூபா | 1 000 000 |
| 2020.06.04 இல் மூலப் பொருட்கள் கொள்வனவு செய்தது | ரூபா | 150 000 |
| 2020.06.04 இல் போக்குவரத்து கட்டணம் செலுத்தியது | ரூபா | 5 000 |
| 2020.06.15 இல் மூலப் பொருட்கள் கடனுக்கு கொள்வனவு | ரூபா | 75 000 |
| 2020.06.25 இல் மின் கட்டணம் செலுத்தியது (காசோலை மூலம்) | ரூபா | 4 500 |
| 2020.06.28 இல் ஆடைகள் காசுக்கு விற்பனை | ரூபா | 25 000 |

1) அ) மேலே தரப்பட்டுள்ள நிகழ்வினூடாக நிறைவு செய்யப்படுகின்ற மனித தேவையினைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
   ஆ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள பலமொன்றைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
2) அ) பருமனின் அடிப்படையில் இவ்வணிகமானது எவ்வணிகஅமைப்பு வகைக்குட்பட்டது.(1 புள்ளி)
   ஆ) சாகிரா இங்கு இனம் கண்ட வணிக வாய்ப்பு எது? (1 புள்ளி)
3) அ) இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையானது எவ்வணிக அமைப்பு வகைக்குட்பட்டது (1 புள்ளி)
   ஆ) இவ் விசேட வணிக அமைப்பு வகையினை நிர்வாகம் செய்வது யாது? (1 புள்ளி)
4) அ) "சாகி நவீன ஆடையகம்" வணிகத்தை கட்டாயமாக பதிவு செய்ய வேண்டுமா? (1 புள்ளி)
   ஆ) இது தொடர்பில் காணப்படுகின்ற சட்ட நிலமையினை விளக்குக. (1 புள்ளி)
5) "சாகி நவீன ஆடையகம் வணிகத்தின் 2020.06.01 இல் கணக்கிட்டு சமன்பாடு காணப்படுகின்ற முறையினைத் தருக. (1 புள்ளி)
6) அ) 2020 ஜுன் மாதத்திற்கான வங்கி வட்டியினைக் கணிப்பிட்டுக் காட்டுக. (1 புள்ளி)
   ஆ) வணிகத்தின் கடன் கொடுநரின் பெறுமானம் எவ்வளவு (1 புள்ளி)
7) வணிகத்தின் ஜுன் மாதத்திற்கான வங்கி வட்டியினைக் கணிப்பிட்டு காட்டுக. (2 புள்ளி)
8) அ) 2020.06.25 இல் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கலுக்கான இரட்டைப்பதிவினைத் தருக.(1 புள்ளி)
   ஆ) அதற்கான கணக்கிட்டுப் பதிவுகளை பேரேட்டுக் கணக்குகளில் பதிந்து காட்டுக. (1 புள்ளி)
9) 2020.06.25 இல் வைப்பிலிட்ட காசோலை மறுக்கப்படுமாயின் அதனைப் பதிவு செய்வதற்குரிய இரட்டைப் பதிவினைத் தருக. (2 புள்ளி)
10) இவ்வணிகத்தின் 2020.06.30 இற்கான காசுக்கணக்கைத் தயாரிக்க. (2 புள்ளி)

இவ் வினாப்பத்திரம் சகல சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களின் படி அச்சிட்டு, பொதி செய்செய்யப்பட்டு விநியோகிக்கப் பட்டது



kalvi.lk

## பகுதி I (வணிகக் கல்வி)

2\. 1) அ) மனித தேவைகள் இரண்டினைத் தருக.

ஆ) விருப்பம் என்றால் என்ன என்பதை உதாரணத்துடன் விளக்குக. (2 புள்ளி)

2) பின்வரும் கூற்றுக்கள் "உண்மை" அல்லது "பொய்" என்பதைக் குறிப்பிடுக.

அ) உற்பத்திகளின் மிகையினை இன்னொருவருடன் பரிமாறிக்கொள்வது "பார்டர் முறை" (Barter System) எனப்படும்.

ஆ) சகல வணிகங்களும் இலாபம் பெறும் நோக்கிலேயே செயற்படுகின்றன.

இ) சமகாலத்தில் சகலரும் தமக்குத் தேவையானவற்றை தாமே உற்பத்தி செய்து கொள்கின்றனர்.

ஈ) பாரம்பரிய முறையில் நடாத்தப்பட்டு வந்த பல வணிகங்கள் இன்று நவீன தொல்நுட்ப முறைகளை பயன்படுத்துகின்றன. (2 புள்ளி)

3) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வேகமான முன்னேற்றம் காரணமாக முழு உலகமும் இன்று ஒரு கிராமம் எனும் நிலைக்கு மாறியுள்ளது. மனித தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்வதற்கு இது மிக உதவியாக அமைந்துள்ளது.

அ) சமகாலத்தில் இலத்திரனியல் ஊடகங்களை பயன்படுத்தி வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற 02 முறைகளைத் தருக.

ஆ) விருப்பங்களின் இரு இயல்புகளைத் தருக. (2 புள்ளி)

4) நடேசன் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாக இஞ்சி உற்பத்தியினை மேற்கொண்டு வருகின்றார். இதற்காக அவர் தனது வீட்டுத் தோட்டத்தைப் பயன்படுத்துவதுடன் அவருக்கு உதவியாக தந்தையும் தாயும் அவர்களது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். மேலதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்ற இஞ்சியினை தேயிலையுடன் கலந்து புதிய குடிபான வகையொன்றைத் தயாரித்து ஜின்ஜர் டீ (Ginger Tea) எனும் பெயரில் போத்தலில் அடைத்து நடேசன் சந்தைக்கு வழங்கிவருகின்றார். இதற்காக தந்தையின் லொறியினைப் பயன்படுத்தி வருவதுடன் நடேசன் தன்னிடமிருந்த பணத்தைப் பயன்படுத்தி உற்பத்திக்குத் தேவையான சில இயந்திர உபகரணங்களையும் கொள்வனவு செய்துள்ளார்.

மேலே தரப்பட்ட நிகழ்வின் உதவியுடன் கீழே தரப்பட்டுள்ள உற்பத்தி வளங்களுக்குத் தலா ஓவ்வோர் உதாரணம் வீதம் தருக.

| நிலம் | உழைப்பு | மூலதனம் | முயற்சியாண்மை |
|---|---|---|---|
| அ) ..................... | ஆ) .................................... | இ) .................................... | ஈ) .................................... |

3\. 1) அ) வணிகச் சூழல் என்றால் என்ன?

ஆ) வணிக அகச் சூழல் காரணிகள் 02 இனைத் தருக. (02 புள்ளி)

2) பின்வரும் கூற்றுக்கள் "உண்மை" அல்லது "பொய்" என்பதைக் குறிப்பிடுக.

அ) வாடிக்கையாளர்கள் வணிகத்தின் புறச் சூழல் காரணியொன்றாகும்.

ஆ) பூகோளச் சூழல் வணிகத்தின் புறச் சூழல காரணியொன்றைாகும்

இ) போட்டியாளர் வணிகத்தின் அகச் சூழல் காரணியொன்றாகும்.

ஈ) அரசியல் சூழலானது புறச் சூழல் காரணியொன்றல்ல (2 புள்ளி)

3) தொழில் நுட்பமாற்றங்கள் காரணமாக வணிகங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிந்து பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| வணிகங்களிள் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டவை | வணிகங்களின் சமகாலத்தில் (நவீன) பயன்படுத்தப்படுபவை |
|---|---|
| அ) எளிய கையியந்திரங்கள் | .................................................................... |
| ஆ) சாதாரண தபால் | .................................................................... |
| இ) வியாபார விளம்பரங்களுக்கான அஞ்சல் முகவரி | .................................................................... |
| ஈ) புத்தகங்களின் கணக்குவைப்பு | .................................................................... |



kalvi.lk

4 ) சந்திரிகா உயர் தரம் வரை கற்ற மாணவியாவார். அவளின் வீடானது கடற் கரையோரம் அமைந்துள்ளது. அவளின் தந்தை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன் பிரதேசத்தில் அமைந்துள்ள ஏனைய மீன் விற்பனை நிலையங்களுக்கும் இவரே கடல் மீன்களை வழங்கி வருகின்றார். தந்தைக்கு உதவிசெய்யும் பொருட்டு, சந்தரிகாவினால் அவளது வீட்டின் முன்னால் மீன் விற்பனை நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டது இவ்வணிகமானது "சந்திரிகா கடல் உணவுகள்" (Sandirika Sea Food) எனும் பெயரில் நடாத்திச் செல்லப்படுகின்றது.

அ) சந்தரிகா வணிகத்திற்குள்ள அச்சுறுத்தலொன்றைக் குறிப்பிடுக.

ஆ) சந்திரிகா வணிகத்திற்குள்ள பலமொன்றைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

4. 1 ) பாரமீ முகக்கவசங்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை ரூபா 20 000 மூலதனமிட்டு ஆரம்பித்ததுடன், அதற்காக ரூபா 10 000 வை அவளின் நண்பியாகிய சாரங்கியிடம் கடனாகப் பெற்று கொண்டாள். இவ்வணிக்திற்கு "பாரமீ தரமான முகக்கவசம்" எனும் பெயரினைப் பயன்படுத்துவதற்கும் அவள் எண்ணியுள்ளாள்.

அ) "தரமான முகக்கவசம்" வணிகமானது எவ்வணிக அமைப்பு வகையைச் சார்ந்தது. (1 புள்ளி)

ஆ) இவ்வணிக அமைப்பு வகையிலுள்ள அனுகூலமொன்றையும் பிரதி கூலமொன்றையும் தருக. (1 புள்ளி)

2 ) LOLC ஹோல்டிங்ஸ் PLC ஊழியர்களினால் உருவாக்கப்பட்ட லயன்ஸ் கிளப் விளையாடடுக் கழகத்தை பதிவு செய்வதற்கான விணண்ப்பப்படிவமானது பிரதேச செயலாளர் காரணியாலயத்திலிருந்து பெறப்பட்டது.

இந்நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

அ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக்கான ஓர் உதாரணத்தைத் தருக.

ஆ) விளையாட்டுக்கழகம் பதிவு செய்யப்பட்ட பின்னர் பிரதேச செயலாளர் காரியாலயத்தினால் வழங்கப்படுகின்ற சான்றிதழின் பெயர் என்ன. (2 புள்ளி)

3 ) பின்வரும் கூற்றுக்கள் "உண்மை அல்லது " பொய்" எனக் குறிப்பிடுக.

அ) பங்குடமை வணிமொன்றில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த பங்காளர் எண்ணிக்கை 2 என்பதுடன் உச்ச எண்ணிக்கை 20 ஆகும்.

ஆ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பொறுப்பானது வரையறுக்கபட்டிருக்கும்.

இ) கூட்டுறவுச் சங்கங்கள் 2007 ம் ஆண்டின் 7 ம் இலக்கக் கம்பனிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

ஈ) பெரும்பாலும் அரச திணைக்களங்கள் பொதுமக்களுக்கு அத்தியவசியத் தேவைகளை வழங்குவதற்காகவே நடாத்தப்படுகின்றன.

4 ) அ) ஏனைய வணிக அமைப்புக்களுடன் ஒப்பிடும் போது கூட்டுறவுச் சங்கங்களில் காணப்படுகின்ற 2 பிரதிகூலங்களைத் தருக.

ஆ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பண்புகளில் ஒன்றாகிய சட்டரீதியான தனிமனித அந்தஸ்து (சட்ட ஆளுமை) என்றால் என்ன? (2 புள்ளி)



kalvi.lk

## பகுதி II (கணக்கீடு)

5) 1) அ) கணக்கீடு என்றால் என்ன?

ஆ) வணிகமொன்றின் உரிமையாளரின் உரிமையாண்மையில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய இரு விடயங்களைத் தருக. (2 புள்ளி)

2) திஸ்ஸ என்பவரினால் பாடசாலைப் புத்தகப்பைகளை விற்பனை செய்யும் வணிக மொன்று 2019.01.01 இல் ஆரம்பிக்கப்பட்டது, அத்திகதியில் இடம் பெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு,

1) திஸ்ஸ வணிகத்தில் ஈடுபடுத்திய காசு ரூபா 100 000
2) காசுக்கு கொள்வனவு செய்த தளபாடம் ரூபா 20 0000
3) கட்டடத்திற்கான மாதாந்த வாடகை செலுத்தியது ரூபா 10 000
4) பெற்ற வங்கிக் கடன் ரூபா 50 000
5) கடனுக்கு கொள்வனவு செய்த பாடசாலைப்பைகள் ரூபா 25 000

வேண்டப்படுவது

அ) மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டுச் சமன் பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தருக. முதலாவது உதாரணமாகத் தரப்பட்டுள்ளது

| கொடுக்கல் வாங்கல் . | சொத்து | = பொறுப்பு | + உரிமையாண்மை |
|---|---|---|---|
| 1 | + 100 000 (காசு) | = | + 100 000 (மூலதனம்) |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

ஆ) மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் 2019.01.01 இல் திஸ்ஸ வணிகத்தின் பின்வரும் உருப்படிகளின் பெறுமதியினை வெவ்வேறாகத் தருக.

1) நடைமுறையல்லாச் சொத்துகள்
2) நடைமுறைச் சொத்துக்கள்
3) மொத்தச் சொத்துக்கள்
4) உரிமையாண்மை (4 புள்ளி)

3) சுலோச்சனா வணிகத்தின் 2019 ம் நிதியாண்டுக்குரிய பின்வரும் தரவுகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| ஆரம்ப மூலதனம் | ரூபா 450 000 |
| வருடத்தின் மொத்த வருமானம் | ரூபா 250 000 |
| வருடத்தின் மொத்தச் செலவுகள் | ரூபா 130 000 |
| உரிமையாளர் இட்ட மேலதிக மூலதனம் | ரூபா 50 000 |
| உரிமையாளரின் பற்றுக்கள் | ரூபா 20 000 |

2019 டிசம்பர் 31 இல் உரிமையாளரின் உரிமையாண்மையின் பெறுமதியினைக் கணிக்க.
(2 புள்ளி)

6. 1) அ) சில்லறைக் காசேட்டைப் பேணுவதன் மூலம் வணிகமொன்றிற்கு கிடைக்கப்பெறுகின்ற இரு அனுகூலங்களைத் தருக. (1 புள்ளி)

ஆ) சில்லறைக் காசேட்டிலுள்ள பேரேட்டுக் கணக்கு நிரலில் பதியப்படுகின்ற கொடுக்கல் வாங்கலொன்றைத் தருக. (1 புள்ளி)

2) பின்வரும் அட்டவணையிலுள்ள இடைவெளிகளைப் பூர்ணப்படுத்துக

| மூல ஆவணங்கள் | முதன்மை ஏடுகள் |
|---|---|
| அ) .......................................... | பொது நாட்குறிப்பேடு |
| காசோலையின் அடியிதழ் | ஆ) .................................. |



kalvi.lk

3 ) சௌமியா வணிகத்தின் 2020.04.01 இல் காணப்பட்ட மீதிகளில் சில பின்வருமாறு

| | |
|---|---|
| வங்கி மீதி | ரூபா 25 000 |
| கடன்பட்டோர் | ரூபா 30 000. |
| கடன் கொடுநர் | ரூபா 25 000 |

ஏப்ரல் மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன

04.05 கடன் பட்டோரிடமிருந்து ரூபா 10 000 பெறுமதியான (காசோலை இலக்கம் 933) கொண்ட காசோலையொன்று கிடைக்கப்பெற்றது.

04.10 ரூபா 15 000 காசு வங்கியிலிடப்பட்டது

04.12 கடன் கொடுநருக்கு ரூபா 24 700 காசோலையொன்று (கா. இலக்கம் 507) செலுத்தப்பட்டது. இதன் போது கிடைத்த கழிவு ரூபா 300 ஆகும்.

04.15 கடன்பட்டோரிடமிருந்து ரூபா 9500 காசோலையொன்று கிடைக்கப் பெற்றதுடன், அத்திகதியிலேயே அது வங்கியிலிடப்பட்டது இதன் போது வழங்கிய கழிவு ரூபா 500 ஆகும்.

***வேண்டப்படுவது -***

ஏப்ரல் மாத்திற்கான வங்கிக் கணக்கினை கழிவு நிரலுடன் கூடியதாக தயாரித்து சமப்படுத்துக.

4 ) லக்சிமா வணிகத்தின் 2019.12.31 இல் பேரேட்டுக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் கீழே தரப்படுகின்றன.

| | ரூபா |
|---|---|
| கடன்பட்டோர் - | 20 000 |
| நிலையான வைப்புகள் | 200 000 |
| கடன் கொடுநர் | 40 000 |
| காணியும் கட்டடமும் | 500 000 |
| வங்கி மீதி | 70 000 |
| கொள்வனவு | 177 000 |
| விற்பனை | 305 000 |
| கொடுத்த கழிவு | 3 000 |
| பெற்ற கழிவு | 6 000 |
| சம்பளமும் கூலியும் | 10 000 |
| வங்கிக் கடன் | 200 000 |

வேண்டப்படுவது - லக்சிமா வணிகத்தின் பரிட்சை மீதியினைத் தயாரித்து மூலதனத்தைக் கணிக்கவும்.
(4 புள்ளி)

7. 1 ) வணிகமொன்றின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்ற உருப்படியொன்றையும், செலவு வைக்கப்படுகின்ற உருப்படியொன்றையும் தருக. (2 புள்ளி)

2 ) தொங்கல் கணக்கு என்றால் என்ன? (2 புள்ளி)

3 ) நரேன் வணிகத்தின் 2020 பெப்ரவரி மாதத்தில் வங்கிக் கணக்கில் ரூபா 30 000 அனுகூலமான மீதியொன்று காணப்பட்டது. வங்கியினால் அம்மாதத்திற்கு அனுப்பப்பட்ட வங்கிக் கூற்று மீதி ரூபா 29500 வைக் காட்டியது இரண்டு மீதிகளினதும் வித்தியாசத்திற்கு பின்வருவன காரணம் என பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

- நிலையியற் கட்டளையின் கீழ் செலுத்தப்பட்ட காப்புறுதித்தவணைக் கட்டணம் ரூபா 3000 ஆகும்.
- வைப்புச் செய்யப்பட்டும் தீர்வையாகாத காசோலைகளின் பெறுமதி ரூபா 8000 ஆகும்.



kalvi.lk

- வங்கிக்கு நேரடியாக கிடைக்கப் பெற்ற பங்கிலாப வருமானம் ரூபா 4500 ஆகும்.
- வழங்கப்பட்டும் இது வரை வங்கியில் கொடுப்பனவுக்காக முன்வைக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 6000 ஆகும்.

***வேண்டப்படுவது***

அ) பெப்ரவரி மாத்திற்கான திருத்தப்பட்ட காசேடு
ஆ)வங்கி இணக்கக் கூற்று (4 புள்ளி)

4) அ) கணக்கிட்டின் போது வழுக்கள் இடம் பெறக் கூடிய 2 சந்தர்ப்பங்களைத் தருக. (4 புள்ளி)
ஆ)பரீட்சை மீதி சமப்படுவதில் தாக்கத்தையே ஏற்படுத்தும் இரு வழுக்களையும், பரீட்சை மீதியில் சமப்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்தாத இரு வழுக்களையும் தருக. (2 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන


2025
1ம் தவணை வகுப்புகள்
தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
ஆரம்பம் 01.01.2025
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.
அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...
Education கல்வி
Kalvi.lk
Whatsapp
075 287 1457